# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS.No**.75/2015 **Date**: 05.11.2024

**PW**2- தங்கவேல்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வாதி கேட்டுகொண்டதால் சாட்சி சொல்ல வந்தேன். எனக்கு சாட்சி சம்மன் வரவில்லை. பாவாயி சீரங்கனின் மனைவி என்றால் சரிதான். 2ம் வாதியின் அம்மா பெயர் சீரங்காயி. அவருக்கு சித்துக்குட்டி என்பவருடன் திருமணம் ஆனது என்றால் எனக்கு தெரியாது. 2ம் வாதி மேட்டுக்கடையில் வசிக்கிறார் என்றால் சரிதான். அவர் வீட்டில் இருந்து 100 அடி தூரத்தில் என் வீடு உள்ளது. 2ம் வாதி வசிக்கும் வீட்டில் தான் பிரதிவாதிகளும் வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல. 2ம் வாதியுடன் முருகன், சீரங்காயி ஆகியோர்கள் தான் வசிக்கிறார்கள். சீரங்கன் முத்துப்பிள்ளை என்பவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். முத்துப்பிள்ளைக்கு 1 மகன் உள்ளார். அவர் பெயர் தெரியாது. அவர் குமாரபாளையத்தில் வசிக்கிறார் என்றாலும் 1ம் வாதியுடன் வசிக்கவில்லை என்றாலும் சரிதான். சீரங்கன் எனக்கு பழக்கம். அவருடன் பிறந்தவர் பெருமாள் மட்டும் தான். தாவா சொத்தின் ச.எண்கள்.26A மற்றும் 27/4. தாவா சொத்துக்களின் பட்டா எண்கள் தெரியாது. மேட்டுக்கடையில் உள்ள வீட்டை சீரங்காயி தான் கட்டினார். தாவா சொத்தில் ஒரு முருகன் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலுக்கு பிரதிவாதிகள் தான் பூஜை செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அனைவரும் சேர்ந்து தான் வருகிறார்கள். அந்த கோவில் பூஜையில் நான் கலந்து கொள்வேன். தாவா சொத்துக்கள் தவிர வாதி பிரதிவாதிகளுக்கு வேறு சொத்துக்கள் இல்லை. தாவா சொத்துக்கள் 2 அயிட்டமாக உள்ளது ஒன்று 55 செண்ட், மற்றொன்று 2-1/2 செண்ட். முத்துப்பிள்ளையும் அவரது மகனும் குமாரபாளையத்தில் சொந்த வீட்டில் தான் வசிக்கிறார்கள். தாவா சொத்தில் முருகன் கோவில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துகளில் மொத்தம் 4 வீடுகள்

உள்ளது. அவற்றில் 2 முதல் 4 பிரதிவாதிகள் வசிக்கிறார்கள். அந்த வீடுகள் தாவாவில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. முத்துப்பிள்ளையும் அவரது மகனும் குமாரபாளையத்தில் வசிக்கும் வீடு தாவாவில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி வீடு கட்டிய தேதி, மாதம், வருடம் தெரியாது. 3ம் பிரதிவாதி வீட்டின் ச.எண்.27/4. 2ம் பிரதிவாதியும் அதே சொத்தில் தான் வீடு கட்டியுள்ளார். 3ம் பிரதிவாதி வசந்தா பெயரிலுள்ள ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. அதில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. 3ம் பிரதிவாதி பெயரிலுள்ள ஆவணத்தை நகல் வாங்கிய தேதி எனக்கு தெரியாது. ச.எண்.27/4ன் கீழ் உள்ள சொத்தை மாரியப்பனும் செங்கோட்டையனும் சேர்ந்து வசந்தாவிற்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார்கள். எவ்வளவு சொத்தை எழுதி கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது. )

Sd/-தங்கவேல்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.